www.padippakam.com

நிறுவியது - 1958 மலர் : 43 1.1.2001 இதழ் 8 Nathigam

# நாத்திகம்

திருவள்ளுவர் ஆண்டு 2031 ஆசிரியர் : பி. இராமசாமி மார்கழி - 17 - விலை ரூ. 5.00

## எம்.ஜி.ஆர். சமாதியில்

# கொள்ளைக்காரியின் கொழுப்பேறிய பேச்சு!



கொள்ளைக்காரி - ஜெயலலிதாவின் கொழுப் யேறிய ஆணவப் பேச்சு எல்லை தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறது!

இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் தலைவர் களுமே தனக்கு அடக்கமானவர்கள் - கீழே உள்ளவர்கள்தான் என்கிற அகங்காரத்தோடு அந்தப் பெண்மணி பேசி வருகிறாள்!

இந்தியப் பொது வாழ்க்கையில் மாபெரும் தியாகங் களைச் செய்து, அதனால் இந்தியாவே இவளுக்குக் கடமைப்பட்டிருப்பது போன்ற மமதையில் இந்தக் கொள்ளைக்காரி பேசி வருகிறாள்!

பிரதமர், ஜனாதிபதி, முதல்வர், கவர்னர்... யாராக இருந்தாலும், இவளது 'கவட்டுக்குக் கீழே'தான் என்பதைப் போன்ற அகங்காரத்தோடு இவள் பேசி வருகிறாள்!

நீதிமன்றங்களில் அமரும் நீதிபதிகள்கூட, தனக்கு அடங்கித்தான் அமரவேண்டும் என்பதைப் போன்ற மனோபாவத்தில் இவள் செயல்பட்டுக் கொண்டிருக் கிறாள்!

இத்தனைக்கும் இவள் யார்? சமூகத்தில் இவளுக் கென்ன மரியாதை? நாடு இவளை எப்படி அறிந்தது? அரசியலுக்கு இவள் எந்தத் தகுதியோடு வந்தாள் என்பதையெல்லாம் எல்லாரும் அறிவோம்!

கனத்த ஆசனத்தையும், பெருத்த மார்பகங்களை யும், திரண்ட தொடைகளையும், தளுக்கிக் குலுக்கிக் காட்டி, காமக் கிளர்ச்சியை உண்டாக்கும் அசிங்கியக் கவர்ச்சி நடிகை என்கிற அறிமுகத்தோடுதான் இவள் நாட்டு மக்களுக்குத் தெரியவந்தாள்!

பின்பு, எம்.ஜி.ராமச்சந்திரனின் 'கூத்தியாள்' என்கிற அடையாளத்தோடு, அவருக்குக் 'கட்டணக் கழிப்பிடமாகப்' பயன்பட்டு வந்தாள்! இந்தப் பெய ரோடுதான் இவள் அரசியலுக்கும் அறிமுகமாகி,

படிப்பகம்

www.padippakam.com



# கொள்ளைக்காரி ஜெயலலிதா எம்.ஜி.ஆரின் கட்டண கழிப்பிடமே!

பிரபலமும் அடைந்தாள்!

வேறு எந்தத் தகுதியும் இந்தக் கொள்ளைக் காரிக்குப் பொதுவாழ்க்கையில் கிடையாது! இவள் தொண்டு செய்தோ, தியாகம் செய்தோ பொது வாழ்வில் புகழ் பெற்றவளுமில்லை.

இவளுக்குள்ள ஒரே பொது வாழ்க்கைத் தகுதி 'எம்.ஜி.ஆர். கழிப்பிடம்!' என்பதுதான்!

ஆனால், இவளது கற்பனையில், எம்.ஜி.ஆருக்குக் கட்டணக் கழிப்பிடமாக இருந்ததே, காந்தியடிகளையும் மிஞ்சிய தேச சேவை செய்ததற்குச் சமம் என்பதைப்போல் ஆணவம் கொண்டு நிற்கிறாள்!

ராஜீவ் காந்தி அமைத்துக் கொண்ட தவறான கூட்டணியாலும், ராஜீவ் காந்தியின் கோரமரணத்தாலும் ஏற்பட்ட சூழ்நிலையால், தேர்தலில் வெற்றி வாய்ப்புப் பெற்று, ஒரு ஐந்தாண்டுக் காலம் தமிழ்நாட்டை ஆளும் அதிகாரத்தைப் பெற்ற இந்தக் கொள்ளைக்காரி, அப்போது அடித்த கொள்ளைப் பணம் கையில் இருக்கும் மமதையால், நாட்டுத் தலைவர்கள் பலரையும் நாலாந்தர மொழியில் வசை பாடிக் கொண்டிருக்கிறாள்,

"...கவர்னர் கையைப் பிடித்தார்; முதல்வர் முந்தானையைப் பிடித்தார்..." என்றெல்லாம் மூத்த தலைவர்கள்மேல் குச்சுக்காரித் தனமாகக் குற்றம் சொன்ன இந்த வெட்கங்கெட்ட கொள்ளைக்காரி, ஆபாச அர்ச்சனை செய்யாத தமிழகத் தலைவர்களே கிடையாது!

அண்மையில் "தி.மு.க.வை ஒழிப்பேன்! கருணாநிதியை அழிப்பேன்!" என்று பேசிய இந்தக் கொள்கைக்காரியின் கொலை வெறிப்பேச்சைக் கண்டிக்காதத் தலைவர்களே கிடையாது, எல்லாரும் கண்டித்தார்கள்.

தி.மு. கழகமோ இவளது இந்த வாய் கொழுத்த பேச்சுக்கு, நாடு தழுவிய கண்டனக் கூட்டங்களை நடத்தி, அவளுக்குத் தனது ஜனநாயக ரீதியான கண்டனத்தைத் தெரிவித்தது!

ஆனாலும், இந்தக் கொழுப்பேறிய கொள்ளைக் காரிக்குப் புத்தி தெளிவு ஏற்பட வில்லை!

இப்போதும் அதே பாணியில் எம்.ஜி.ஆர். சமாதியில் போய் நின்று நாற்ற வாந்தி எடுத்திருக்கிறாள், அரசியல் நாகரீகமே தெரியாத இந்தப் பகல் கொள்ளைக்காரி!



''.... திருக் குவளையிலிருந்து சென்னைக்கு வந்தபோது கருணாநிதிக்கு உள்ள சொத்து மதிப்பு எவ்வளவு? அவர் கொண்டு வந்தது என்ன? ஒரு நாத சுரமும், ஒரு மேளமும் தானே? இன்று எப்படி இவ்வளவு சொத்து சேர்ந்தது...?"

- இது கொள்ளைக் குற்றத்துக்காக நீதி மன்றங்களால் 7 ஆண்டுகளுக்கும் மேல் தண்டனை வழங்கப்பட்டு, அபராதத்தைக் கட்டிவிட்டு, தண்டனைக்கு அப்பீல் செய்து, ஜாமீன் குற்றவாளியாக வெளியிலேநடமாடிக் கொண்டிருக்கும் பகல் கொள்ளைக்காரியின் வேசித்தனமான பேச்சு!

தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த சாதிப் பிரிவைக் கேவலப் படுத்தும் நோக்கத்தில் நாதசுரத்தையும், மேளத்தையும் குறிப்பிட்டிருக்கிறாள், இந்த அசிங்கியப் பிறவி!

வாதத்திற்காக ஒப்புக் கொண்டு, இந்தக் குணக்கேடிக்கு நாம் பதில் சொல்லுவதனால், கலைஞராவது ஒருநாதசுரம், மேளம் மூலதனத்தோடு சென்னைக்கு வந்தார்; உன்மூலதனம் என்ன? நீ கர்நாடகத்திலிருந்து சென்னைக்கு வந்தாயே, என்ன முதலீட்டோடு வந்தாய்? நீ கொண்டு வந்த சாமான்கள் என்ன? ஆபாசப் பெண்ணே! அந்த உன்சாமான்களைக் கொண்டு தானே, உன் குடும்பமே வயிற்றுப் பிழைப்பு நடத்தியதாக, நீயே எழுதி வைத்திருக்கிறாய்? அப்படிப்பட்ட குச்சுக் காரத்தனம் செய்த உனக்கு எப்படி கோடி கோடியாகப் பணமும், கொத்துக் கொத்தாக நகைகளும் வந்தன.

நீதிமன்றங்களே அந்த உண்மையை விசாரித்து அறிந்துதானே உனக்கு ஆண்டுக்கணக்கில் சிறை தண்டனை தந்துள்ளது? அதற்குப் பிறகும் உனக்குத் திமிர் அடங்கவில்லை; ஆணவம் அகல வில்லை என்றால், உன்னைப் போன்ற கேடு கெட்ட ஈனப் பிறவி உலகத்தில் யாராவது இருக்க முடியுமா?

ஒரு தலைவருக்கு அரசாங்கம் நினைவிடம் அமைத்தால், அந்த இடம் அரசுச் சொத்து, பொது இடம்! அந்தப் பொது இடத்தில் போய் நின்று வேண்டாதவர்களைத் திட்டுவது என்பது அரசியல் வேசித்தனம்!

அந்த வேசித்தனத்தைத்தான் பகல் கொள்ளைக்காரி, எம்.ஜி.ஆர். சமாதியில் செய்துள்ளாள்!

எம்.ஜி.ஆர். நினைவுநாள் என்று சொல்லி, அவரது சமாதிக்கு ஊர்வலம் போன கொள்ளைக்காரி, அவரது நினைவைப் போற்ற ஒரு வரிகூடச் சொல்லாமல், முழுக்கக் கலைஞர் அவர்களை வசைமாரிப் பொழியவே சமாதியைப் பயன்படுத்தியுள்ளாள்!

படிப்பகம்

www.padippakam.com

# கலைஞருக்கு நாதசுரம் என்றால் ஜெயலலிதா ஆயுதம் எது?

உண்மையில், கொள்கைக்காரி சொன்னதைப்போல், கலைஞர் நாதசுரம்-மேளத்தோடு சென்னைக்கு வரவில்லை. அவர் கொண்டு வந்த ஆயுதம் 'வீரியம் மிக்க பேனா!' அந்தப் பேனாவைக் கொண்டே லட்சம் லட்சமாகச் சம்பாதித்தார்! அவர் திரைப்படத்துக்கு வசனம் எழுதிய நாளில் நடிகர், நடிகை, இயக்குநர்களைவிட வசனகர்த்தாவே 'ஹீரோ' வாக கருதப்பட்டார்.

அப்படி 'ஹீரோ'வாக இருந்த காலத்திலேயே அவர் வீடு - வாசல் வாங்கி 'செட்டில்' ஆகிவிட்டார்!

இப்போது, கோபாலபுரத்திலுள்ள கலைஞரில் வீடு, அவர் பதவிக்கு வருவதற்கு முன்பே வாங்கப்பட்டது! சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பே அதை வாங்கிவிட்டார்.

இந்த உண்மைகளெல்லாம் போயஸ் தோட்டக் கொள்ளைக்காரிக்கும் தெரியும்! தெரிந்தும் அவள் தெருமுனைப் 'பஜாரி' யைப்போல் கலைஞரைத் தரங்கெட்டுத் திட்டித் தீர்க்கிறாள்; அவள் பிறப்பு அப்படி!

இன்றைக்கு மட்டுமல்ல, இவள் ஆட்சி அதிகாரத்திலிருந்த காலத்திலேயே தலைவர் கலைஞர் அவர்கள்மீது ஊழல் குற்றம் சொல்லி, விசாரணை நடத்த ஒரு கமிஷனே போட்டாள், இந்தக் கொள்ளைக்காரி! இதை நாட்டு மக்கள் மறந்துவிட்டார்கள் என்று நினைக்கிறாள், இந்தப் பெண்மணி!

1989 முதல் 1991 வரையில் முதலமைச்சராகவும், தொழில் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்த கலைஞர் மீது, பின்னால் வந்த ஜெயலலிதா அரசு பல ஊழல் புகார்களைக் கூறியது.

அந்த ஊழல் புகார்களை விசாரிக்க ஜெயலலிதா ஆட்சியில் நீதிபதி சிவ சுப்பிரமணியம் அமர்த்தப்பட்டார். விசாரணை நடந்தது.

கலைஞர்மீது, ஜெயலலிதா அரசு சொன்ன எந்த ஊழல் புகார்களுக்கும் எந்த ஒரு ஆதாரமும் இல்லை என்று சிவ சுப்பிரமணியம் விசாரணைக் கமிஷன் அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்தது.

இந்த அறிக்கை சரியில்லை. கமிஷன் முன்பு வைக்கப்பட்ட புகார்கள்மீது சி.பி.ஐ. விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்று தியாகி - ஆர்.ஆர்.தளவாய்



என்பவர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி - ஜே. கனகராஜ் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

"ஒரு விசாரணைக் கமிஷன் விசாரித்து அறிக்கை தந்துவிட்ட பிறகு, அதே புகார்மீது இன்னொரு அமைப்பு விசாரணை நடத்தத் தேவையில்லை" - என்று கூறி, தளவாய் வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

இந்த உண்மைகளையெல்லாம் நாட்டு மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து, கொள்ளைக்காரி 'பிலாக் கணம்' பாடுகிறாள்!

நாட்டு மக்கள் தெளிவோடு இருக்கிறார்கள். யார் ஊரைக் கொள்ளையடித்தவர்கள்; யாரை நீதிமன்றங்கள் குற்றவாளி என்று தீர்ப்புச் சொல்லுகின்றன என்பதையெல்லாம் மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள்!

எனவே, கொள்ளைக்காரி ஜெயலலிதா இப்படிப் பல சமாதிகள் முன் நின்று கொழுப்பேறிப் பேசினாலும் மக்கள் நம்ப மாட்டார்கள் என்பதுதான் உண்மை'.

- *'சூனாமானா'*

# ஆலயங்களுக்கு வாரியமா?

*கவிஞர் தஞ்சை கோ.சீராமுலு*
*(ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரி)*



ஆலயங்கள் யாவையுமே நிர்வகிக்க
அதற்காக வாரியமும் வேண்டு மென்றே
ஆரியமுன் னிகளுமே ஒன்று கூடி
அநியாய வேண்டுகோள் அனுப்பி யுள்ளார்
ஆலயத்தின் சொத்ததனைச் சுரண்டித் தின்ன
அவர் செய்யும் சூட்சியென்றே அறிய வேண்டும்
ஆலயங்கள் அரசுடைய கட்டுப் பாட்டில்
அடங்கியே இருப்பதனால் கொள்ளை இல்லை.

அரசாங்க மேற்பார்வை இல்லை என்றால்
அவர் செய்யும் கொள்ளைகளும் வெளியே தோன்றா
மறைவாக உணவுவகை போவதேபோல்
மற்றெல்லா நகை நட்டும் மறைந்தே போகும்
விரைவாக சொத்தெல்லாம் வீணே ஆகும்
வேண்டியவர் சுற்றத்தார் விருத்தி யாவார்
கரையான்கள் தின்பதைப்போல் கரைந்தே போகும்
கடவுளவர் கல் சிலையே மிஞ்சி நிற்கும்.

படிப்பகம்

www.padippakam.com

# நாடாளுகின்றாய் நான்காம் தடவை உன்னை இனிவெல்லுமோ புடவை?



# நீயேதான் அடுத்தும் முதல்வன் அஞ்சுகம் மைந்தா!

தந்தை பெரியார், அம்பேத்கார், திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ. விசுவநாதம் விருது வழங்கும் விழாவில் முதல்-அமைச்சர் கலைஞரைப் பற்றி கவிஞர் வாலி பாடிய கவிதை :

## அமுதமே

நான்
காதலாகி
கசிந்து கண்ணீர் மல்கி
கைகூப்பித் தொழும்; தமிழ்க்
கடவுளெனக் கண்முன் எழும்...

மாண்புக்கெல்லாம் மாண்பான
மாண்பமைந்த முதல்வா!
அற்றை நாளில் - ஓர்
ஆண்மகவு வேண்டுமென்று
பெற்றோர் நோன்பிருந்து
பெற்றெடுத்த புதல்வா!

நூற்கடல் முத்துவேலர் - ஒரு
நொடிக்கு நொடி நேசித்த
பாற்கடல் அஞ்சுகத்தன்னை
பயந்தநல் அமுதமே!

மடமையில் உறங்கும் - இந்த
மண்விழிக்க வேண்டி - ஒரு
கற்பரசி மடிக்குளத்தில்
கண்விழித்த குமுதமே!

சிறு
மகவு அணையதொரு
மனம் படைத்தோய்! உன்
தகவு அடங்குமோ - என்
தமிழுக்குள்? பசிபிக்
சமுத்திரம் அடங்குமோ - சின்ன
சிமிழுக்குள்!

என்னிடத்தில்
ஏது - உன்
கீர்த்தியைச் சுட்ட - ஒரு
சொற்குறி?

உன்
விஷயத்தில்
தலைவா! நானொரு
தற்குறி!

## உதயசூரியன்

கறுப்பு சிவப்பு
கரை கொண்ட வேட்டியை
உடுத்தி நடக்கும்
உதய சூரியனே!
'முரசொலி'யில் நீவரையும்
மடல்படித்து - உன்னுள்
இடம்பிடிக்கும் உடன்பிறப்புகளின்
இதயசூரியனே!

ஞான
ஞாயிறே!
உனக்கு உண்டு சுத்த மனம்;
உனக்கு உண்டு ஒத்த மனம்;
உனக்கு உண்டு யுத்த மனம்;
உனக்கு இல்லை அத்தமனம்!

பேசரிய பீடுடைய
பெருந்தகையே!
கூலிங்கிளாஸ் அணிந்த
குறுந்தொகையே!

அணுவளவும் குறையாது - உன்
ஆரோக்கியம்! முன்னம்
அரசாண்டவர்களில் - உன்னைவிட
ஆர்யோக்கியம்?

சிலர்
வாழ்ந்த வாழ்வை - அவர்களது
வண்டவாளம் சொல்லும்; உன்
வாழ்வை - கல்லக்குடி
தண்டவாளம் சொல்லும்!

நிச்சயம் - நீ
நூறாண்டு வாழ்வாய்!
ஆம்!
அது...

தீர்க்கசுமங்கலியாம்
தயாளு அம்மாளின்
தாலி பாக்கியம்; அதுவே இந்த
வாலி பாக்கியம்!

ஊராளும்
உத்தமனே!
உன் பெயர் சொல்லி - தன்
உச்சந்தலையில் - தினம்
பூசாத்தி மகிழும் - பெண்ணரசி
ராசாத்தி துணைவா - இரு
நங்கையர் திலங்கங்களுக்கும் - நீ
நெடுங்காலம் துணை வா!

## அமைதிப் பூங்கா

சிம்மா சனத்திலும்; தமிழ்ச்
சனத்தின் மனத்திலும்...
கொலுவமர்ந்து - செங்
கோலோச்சும் தலைவா!
உனக்கும் சோம்பலுக்கும்
ஒராயிரம் கல் தொலைவா?

படிப்பகம்

www.padippakam.com

# தடியில்லாத் பெரியார்! பொடியில்லாத அண்ணா!

வேலையில் மூழ்கிவிட்டால் - உன்
விழிகள் தூங்கா;
நாட்டவர் நலத்தை - உன்
நினைப்புகள் நீங்கா; உன்
கோட்டை மேசையில்
கோப்புகள் தேங்கா; உன்னால்.
ஆனதய்யா - தமிழ் பூமி
அமைதிப்பூங்கா!

நீ
'ஏ.எம்.' முதல்
'பி.எம்.' வரை
சலிக்காது உழைக்கும்
'சி.எம்.'

நீ தேசமிகு - தமிழ்த்
தேயம் - தனைக்காக்கச்
சிலிர்த்து நிற்கும்
சீயம்!

முத்தமிழ் வித்தகமே! கால்கள்
முளைத்து நடக்கும் முப்பால் புத்தகமே!
நீ
நாடாளுகின்றாய்
நான்காம் தடவை;
உன்னை - இனி
வெல்லுமோ புட்வை?

நிச்சயம்
நாளைய தேர்தல் - இந்த
நான்கை ஆக்கும் ஐந்தா! நீயேதான்
அடுத்த முதல்வன் அஞ்சுகம் மைந்தா!

## விந்தையே!

தலைமுறை
தலைமுறையாய்த்
தலைவனாயிருந்தும்
தலைகனக்காத விந்தையே! மாநகரத்
தந்தையின் தந்தையே!

உன்னால்தான் உண்டானது
உழவர் சந்தையே; இனி
உழவர் பெருமக்கள் -
உடுத்தமாட்டார் கந்தையே!

சதா
சர்வகாலமும்
மக்கள் பக்கம்தான்
மன்னா! உன் சிந்தையே;
என்ன செய்யும்?
ஏது செய்யும்?
வசவாளர் உன்மேல்
வீசுகின்ற நிந்தையே!

சிலர்
வாய்ப்புளிக்கச் சொல்லுவார்
'வந்தபின் பார்ப்போம்!' என்று;
வள்ளலே! நீதான் சொன்னாய்
'வருமுன் காப்போம்!' என்று!

சாதிக்கும் சாதிக்கும்
சண்டைகள் வராமல்
சாதிக்கும் - நீ கட்டிய
சமத்துவபுரங்கள்; அவை
வன்பகை தீர மன்பதைக்கு - நீ
வழங்கிய வரங்கள்!

இனி
இங்கு...
கூன் பிறையும் கோதண்டமும்
கை குலுக்கும்;
சிலுவையும் அவற்றை
சினேகிக்கும்!

ஏசுதேவனும்
வாசுதேவனும் கூடுவர்; இதுகாறும்
'டு' விட்டிருந்தவர்
டுயட் பாடுவர்!
நாடாளும்
நல்லவனே!
நீ
சாதித்திருக்கிறாய்
சமயப்பொறை;
இதுசாதாரணமல்ல
இமயப்பொறை!

அன்பின் மேன்மை
அறிந்தவன் நீ;
'அன்பின் வழியது உயிர்நிலை!' என
அய்யன் வள்ளுவன் -
செப்பிய ஞானம் -
செறிந்தவன் நீ!

மாண்புமிகு மாறனின்
மற்றொரு தாயே! உன்
அன்பினாலன்றோ தீர்ந்தது
அன்னவன் நோயே!

'அக்கா மகன்' என்ற அளவிலா
அன்பு காட்டினாய்? நீயே பெற்ற
பக்கா மகன் என்று அல்லவோ
பாசம் ஊட்டினாய்!

## தாயானாய்

அந்நாளில் - உன்னை
அனேகம் பேர் அழைப்பர் - உன்
முழுப்பெயர் சொல்லாமல் -
'மு.க... மு.க...' என்று;
பிறகுதான் - எனக்குப்
புரிந்தது - நீ
முத்தமிழர் மூச்சுவாங்கும்
மூக்காயிருக்கிறாய் என்று!

இனிய தலைவனே! நீ
இன விடுதலைக்காக...
உண்ணாவிரதம் நோற்காமல்
அண்ணாவிரதம் நோற்றவன்;
அண்ணாவின் நாமத்தை - உன்
உண்ணாவில் ஏற்றவன்!

அதனால்தான்
அய்யா! நீ...
அண்ணனுக்குப் பின்
அண்ணனானாய்; அந்த -
மன்னனுக்குப் பின்
மன்னனானாய்!

உன்னைப் பற்றி - நான்
ஓர்த்ததைச் சொல்வேன்...
நீ
தடியில்லாத பெரியார்;
பொடியில்லாத அண்ணா; அவ்
இருவரும் உன் வடிவில்
இருக்கின்றார் ஒண்ணா!

நீ
வாலறிவன்; உன்னில் நான்
காலறிவன்!
என்னும் - என் எழுத்துக்களை ஏற்று
'நன்று! நன்று!'
எனக் களித்தாய்; இன்று
நல்விருதும்
எனக்களித்தாய்!

பெரியவனே! நீயெனைப்
பெரும்புகழ் என்னும்...
தொட்டிலில் போட்டுத்
தாலாட்டும் தாயானாய்; நான்
வாழ்நாளெல்லாம் - நன்றியோடு
வாலாட்டும் நாயானேன்!

★

## திருத்தம்

'நாத்திகம்' 15.12.2000 இதழில், தோழர் மயிலை லோகநாதன் பற்றிய கட்டுரையில் மயிலாப்பூர் - எச்.டி.ராஜா என்பவர் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிட்டது 1962 தேர்தல் அல்ல; 1957 பொதுத் தேர்தலில் என்று திருத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

- ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com



# உங்களிடம் பேச என்ன இருக்கிறது?



'உழுபவனுக்கே நிலம் சொந்தம்'
இது செங்கொடி இயக்கத்தின் முழக்கம்
'காலில் விழுபவனுக்கே
தொகுதி சொந்தம்'
இது ஜெயலலிதாவின் பழக்கம்.

முழக்கத்திற்காகப்
பழக்கத்தை விட முடியுமா? என்று
வழக்கம்போல்
பேசுகிறார்கள்
இடது, வலது தலைவர்கள்

தொண்டர்களே
உங்கள் கண்களுக்குத் தெரிகிறதா?
சாமர்த்தியமாகப் பேசும்
உங்கள் வாய்களில்
சசிகலா பண்ணைகளின் சாணிப்பால்!

சாணிப்பாலே சம்மதம் எனில்
**உங்களிடம் பேச என்ன இருக்கிறது?**

பண்ணைகளின்
ஆதிக்கத்திற்கெதிராகத் தூக்கிய
அரிவாளும் சுத்தியலும்
கடைசியில்
போயசு தோட்டத்தில்
புல்லறுக்கத்தான் என்றால்,

தோழர்களே இனி உங்களிடம்
பேச என்ன இருக்கிறது?

தேசிய அளவில் தேர்தல் சின்னத்தை
பயன்படுத்த தடையா?
தவித்துப் போகும் காம்ரேடுகளே

உலக அளவில் தியாகிகளின் ரத்தத்தால்
திமிறி எழுந்த சின்னத்தை
புரட்சித் தலைவியின்
ஆசிபெற்ற சின்னம் என்று
சுவரில் கிறுக்கும் நீங்கள்
செங்கொடியையும்
பயன்படுத்தக் கூடாது என்று நாங்கள்
ஏன் தடை செய்யக் கூடாது?

பால் திரியப் பார்த்ததுண்டு
இரத்தத்திலும் திரிபு காணும்
ராஜதந்திரி நீங்களென்றால்,
இனி பேச என்ன இருக்கிறது?

ஆளும் வர்க்கங்களின் அரசியல்
சந்தையில்
புரட்சியை விலை பேசும்
கமிசன் மண்டிகளான உங்களுக்கு
கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை எதற்கு?
தயவு செய்து உங்கள்
விலைப் பட்டியலை வெளியிடுங்கள்.

கூட்டணி போட்டுக்
கொள்முதல் இயக்கம் நடத்தும்
இடது வலதுகளே!

...

'செங்கொடி இயக்கம் வாழ்க!'
என் முஷ்டி உயர்த்திய வரலாறு
ஜெயலலிதாவிடம் இரண்டு
சீட்டு கேட்கத்தான் என்றால்
உங்களிடம் பேச என்ன இருக்கிறது?

இன்றோ
நல்லகண்ணுவும் சங்கரய்யாவும்
தங்களை கூவிக் கூவி விற்கிறார்கள்.
எதிரிகளுக்கோ
இனாமாககூட ஏற்றுக்கொள்ள தயக்கம்!

தாயை படித்தால் தகராறு என்பதால்
'எனக்கு பிடித்தது கம்பராமாயணம்'
என மறைந்திருந்து கட்சியைக் கொல்லும்
மகா உத்தியில்
மயங்குகிறார் நல்லகண்ணு.

சங்கரய்யாவுக்கோ
கதை படிக்க தாய்
கடைப்பிடிக்க - 'அம்மா'

மாயூரம் சதி வழக்கும்
நெடும்பலம் வழக்கும்
அசல் கம்யூனிஸ்டுகளை
அடையாளம் காட்டியது.
டான்சி வழக்கோ
போலிகளை
அடையாளம் காட்டிவிட்டது

...

இனி உங்களிடம் பேச
ஒன்று மட்டுமே இருக்கிறது.

ஜமீன்தாரிகளும்
இனாம்தாரிகளும்
உங்கள் கட்சிக்குள்ளேயே இருப்பதை
இனியும் மறைத்தால்

'இனி உங்களுக்குள்
நீங்களே பேச முடியாது!

(மக்கள் கலை,
இலக்கியக் கழகத்தின்
'புதிய கலாச்சாரம்' இதழில்)

படிப்பகம்

www.padippakam.com

# ஊழலுக்கு சிபாரிசு செய்த எதிர்க்கட்சித் தலைவர் சோ.பா.!

தாங்களே 'உலக மகா உத்தமர்கள்' என்று தங்களுக்குத் தாங்களே பாராட்டு மடல் வாசித்துக்கொண்டு திரிகிறார்கள், மூப்பனாரின் த.மா.கா. கட்சிக்காரர்கள்!

ஆனால், உண்மை அதுவல்ல - இன்றைய காங்கிரஸ்காரர்களைப் போன்ற ஊழல் பேர் வழிகள் உலகத்தில் யாருமில்லை!

இந்திரா காந்தியையும், ராஜீவ்காந்தியையும் தங்கள் வழிகாட்டிகளாகக் கொண்டுள்ள இவர்கள் எப்படி உத்தமர்களாக இருப்பார்கள்? இதோ - ஒரு உதாரணம்:-

இராமநாதபுரம் மாவட்டம் பார்திபனூரில் 'ரெகுலேட்டர் கால்வாய்' என்ற வாய்க்கால்களுக்கு கிராமத்துப் பணி செய்ய, தமிழக அரசின் பொதுப் பணித் துறை அண்மையில் டெண்டர் கோரியது.

பல ஒப்பந்தக்காரர்கள் விலைப் புள்ளிகள் குறிப்பிட்டு 'டெண்டர்' கேட்டிருந்தார்கள்.

டெண்டர் கேட்டிருந்தவர்களில் தனிக் கொடி என்பவரும், ஐயப்பன் என்பவரும் பிரச்சினைக்குரியவர்களானார்கள்!

தனிக் கொடி ரூ.1 கோடியே 33 லட்சம் ரூபாய்க்கு டெண்டர் கோரியிருந்தார். ஐயப்பன் என்பவர் அதே வேலைக்கு ரூ.2 கோடியே 3 லட்சத்து 2 ஆயிரத்து 848 என்று டெண்டர் குறியீடு செய்திருந்தார்.

இதில் ஒழுங்கு முறைப்படி குறைந்த தொகைக்கு டெண்டர் கேட்ட தனிக் கொடிக்கு வேலை கொடுக்க பொதுப் பணித் துறை முடிவு செய்தது. நியாயமும் அதுதானே!

ஆனால், இந்திரா-ராஜீவ் வழி வந்த 'யோக்யர்களான' த.மா.கா. காரர்கள் இருக்கிறார்களே, இவர்களுக்கென்று 'தனிவழி' உண்டல்லவா? இவர்கள் இந்திரா பரம்பரையாயிற்றே... அதன்படி பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த துரைமுருகனை சந்திக்கச் சென்றார், 'யோக்கியர்' சோ.பாலகிருஷ்ணன்!

சந்தித்து என்ன கோரிக்கை வைத்தார் தெரியுமா?

"அதிக தொகைக்கு டெண்டர் கேட்ட ஐயப்பன் என்பவரின் ஈ.சி.சி.ஐ. நிறுவனத்துக்கு சலுகை காட்டுங்கள்" என்று



போய் பல்லை இளித்திருக்கிறார்!

எதிர்க்கட்சித் தலைவரின் சட்ட விரோத கோரிக்கையைக் கேட்ட, பொதுப் பணித் துறை அமைச்சர் "அப்படிச் சலுகைக் காட்ட முடியாது! சட்டப்படி, குறைந்த டெண்டர் கேட்டவருக்குத்தான் தர முடியும். எனவே, தனிக் கொடிக்கே டெண்டர் தரப்படும் என்று சொன்னதோடு, இதுபோன்ற சட்டவிரோதச் சிபார்சுக்குத் தாங்கள் வந்தது சரியல்ல" என்றும் புத்தி சொல்லியிருக்கிறார்.

அவ்வளவுதான் "காந்திக்குஞ்சு"க்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. "நான் உங்களைச் சும்மாவிட மாட்டேன்" என்று இந்திரா பாணியில் சவால் விட்டுவிட்டு வெளியே போனார்!

போனவர், "அமைச்சர் ஊழல் செய்து விட்டார்!' வேண்டியவருக்கு டெண்டர் தந்து விட்டார்! அமைச்சரைப் பதவி விலக்குங்கள்" என்று சாக்கூச்சல் போட்டார்!

ஆட்சியில் தவறு நடந்தால், தடுத்து நிறுத்த வேண்டிய எதிர்க்கட்சித் தலைவரே ஊழலுக்குத் தலைமை ஏற்று வந்து, நீதிப்படி நடக்கும் அமைச்சரையே பதவி விலகச் சொல்லுவதுதான் காங்கிரஸ் கலாச்சாரம் போலும்!

இப்படிப்பட்டவர்கள் கொள்ளைக்காரி ஜெயலலிதாவோடு போகாமல், ஊழலற்ற ஆட்சி நடக்கப் போராடும் கலைஞரோடா வருவார்கள்?

விவகாரம் சட்டமன்றத்திற்கே வந்தது. பொதுப்பணித்துறை அமைச்சரைப் பதவி விலகச் சொன்ன எதிர்க்கட்சித் தலைவருக்கு, முதல்வர் கலைஞரே அறிவுரை சொன்னார்.

"எதிர்க்கட்சித் தலைவர், ஆட்சி முறையாக நடக்க ஒத்துழைக்க வேண்டும். அதைவிட்டு தவறு செய்ய இவரே சிபார்சுக்குப் போனது வருதத்தை தருகிறது. அரசுக்குக் கெட்ட பெயர் வர வேண்டும் என்கிற நோக்கத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் செயல்படக்கூடாது" - இப்படி, காங்கிரசாருக்கு அறிவுரை சொன்னார், முதல்வர்!

"ஐயப்பன் என்பவர் யாரோ அல்ல; ஈ.சி.சி.ஐ. நிறுவனத்தின் உரிமையாளர் பி.எஸ்.ஏ.ரகுமான் என்பவரின் பினாமி என்பதையும் சட்ட மன்றத்திலேயே பகிரங்கமாக அறிவித்துள்ளார், முதல்வர் கலைஞர்.

இதுமட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் சோ.பாலகிருஷ்ணன் இதுவரையில் எப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் சிபாரிசு செய்திருக்கிறார் என்பதையும், அவர் வீட்டின் ரிப்பேர் செலவுகள் எத்தனை லட்சம் ஆகியிருக்கிறது என்று பத்திரிகைகளில் வந்த செய்திகளும் அம்பலமாயிற்று! இந்தக் காங்கிரசார் தான் கழக அரசுமீது பொய்க்குற்றம் சொல்லி, போக்கிரிப் பெண்ணோடு கூட்டணி சேரப் போகிறார்கள் - சேரட்டும்!

**- தேசியவாதி**


**நாத்திகம்**

**சந்தா விவரம்**

ஆயுள் சந்தா - ரூ. 1,000.00

ஆண்டு சந்தா - ரூ. 120.00

சந்தா பணத்தை மணியார்டர் மூலம் அனுப்பவும்

அனுப்ப வேண்டிய முகவரி

**நிர்வாகி,**

**'நாத்திகம்',**

**சென்னை - 24.**


படிப்பகம்

www.padippakam.com


# அரியும் ஹரனும் கூடிப் பெற்ற ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்த அய்யப்பசாமி

'அய்யப்பன்' சீசன் ஆரம்பமாகி விட்டது!

'காலராசீசன்', 'வைசூரி சீசன்', 'விஷக்காய்ச்சல் சீசன்', 'கண்வலி சீசன்' என்பதைப்போல ஆண்டுக்கொருமுறை 'அய்யப்பன் சீசன்' நோயும் வந்து போகிறது.

'சாமியே சரணம்' என்ற கூச்சல் காட்டுக் கூச்சலாக ஒலிக்கிறது.

மொத்தச் சமூக விரோதிகளும் ஆளுக்கொரு உத்திராட்சக் கொட்டை மாலையும் கலர் வேட்டி - சட்டையும், போட்டுக் கொண்டு, 'சாமிகள்' ஆகி நடமாடுகிறார்கள்!

இந்தச் சாமிகளில் பலரைக் காணும் போதே நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது.

சமுதாயப் பொறுப்புகள் எதுவுமே இல்லாத திருட்டுப் பயல்கள், பிக்பாக்கெட் - கள்ள சாராயக்காரன்கள், பெண் புரோக்கர்கள், மோசடிக்காரன்கள், கள்ள நோட்டு ரூபாய் இரட்டிப்பு மோசடிக் குற்றவாளிகள் என்று பல சமூக விரோதிகளும்கூட மாலை போட்டு சாமிகளாகி விடுகிறார்கள்!

இவர்கள் 40 நாட்கள் விரதம் பூண்டிருக்கிறார்களாம்! என்ன விரதம் என்று நமக்குப் புரியவில்லை!

சில நாட்களுக்கு முன்பு சென்னைப் புறநகர்ப் பகுதி ஒன்றில், மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று பேர் ஒரு வீட்டில் புகுந்து, கொள்ளையடித்தார்கள்! அந்த மூன்று கொள்ளைக்காரனும் அய்யப்பன் மாலை போட்டு, காவி கட்டி வேஷம் போட்டவனாகவே இருந்தான்.

வேறு சில படித்த மூடர்களும் மாலை போட்டுக் கொண்டு திரிகிறார்கள்.

படிப்புக்கும் அறிவுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பது அய்யப்பன் விஷயத்தில் அப்பட்டமாக வெளிப்படுகிறது.

ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்ததாகச் சொல்லி, அந்தப் பிறப்பைக் கடவுளாக்கி அறிவுள்ள எவனாவது கும்பிட்டுக் கொண்டிருப்பனா?

இந்த அடிமடையர்கள் கோஷம் போட்டுக் கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



தந்தை பெரியார் அவர்கள் சொன்ன "கடவுளை வணங்குகிறவன் காட்டு மிராண்டி" என்கிற தங்கச் சொல், இந்தத் தகாதவர்களுக்குச் சாலவும் பொறுத்தமாகும்.

உலகத்தில் எத்தனையோ மதக்காரன் கடவுளைக் கும்பிடுகிறான். எவனாவது இப்படி ஒரு அசிங்கத்தை - அருவெறுப்பைக் கடவுள் என்று கும்பிடுகிறானா?

கடவுளைக் கும்பிட வேஷம் போட்டு, கோஷம் போட்டு, கூத்தாட்டம் போடும் காட்டு மிராண்டிகள் உலகத்தில் வேறெங்கும் இல்லை.

படித்த முட்டாள்கள் சிலர் சொல்லுகிறார்கள். 'அய்யப்பனுக்கு 40 நாட்கள் விரதம் இருப்பதால், மனிதனின் தீயொழுக்கமான குணங்கள் மறைந்து, நல்லொழுக்கம் பரவுகிறது' என்று!

இந்த வாதமே தவறான - அடிப்படையிலேயே குற்றமானவாதமாகும்.

"மனிதன்" என்ற பகுத்தறிவுப் பிராணியாகப் பிறந்தவன் அத்தனைபேரும், அடிப்படையாகவே - எந்தக் காலத்திலும் நல்லொழுக்கமாக நடக்க வேண்டும்' என்பதே மனிதத் தன்மை! மிகவும் முக்கியமான மனிதக் கடமை!

அதைவிட்டுவிட்டு ஆண்டுக்கு 40 நாட்கள் மட்டும் விபச்சாரம் செய்ய மாட்டேன், மதுகுடிக்க மாட்டேன். பீடி புகைக்க மாட்டேன், மோசடி செய்ய மாட்டேன், பிக்பாக்கெட் அடிக்க மாட்டேன். பிற தீமைகளையும் செய்ய மாட்டேன் என்று 'விரதம்' பூணுவது என்றால், ஆண்டின் மீதியுள்ள எல்லா நாட்களிலும் எல்லாக் குற்றங்களையும் செய்வோம் என்பதுதானே பொருளாகிறது?

அய்யப்பன்கள் சொல்லுகிற இந்தத் தகவலும் உண்மையானதல்ல.

பீடி-சிகரெட் பிடிக்கிற எவனும் அய்யப்பன் மாலை போட்டு விட்டதாலேயே அதைவிட்டு விட்டதாகத் தெரியவில்லை!

சாராயக் குடிகாரன் எவனும் மாலை போட்டு விட்டதால் குடியை நிறுத்தி விட்டதாகவும் இல்லை!

சபரி மலைக்குப் போய் வந்தவர்களைக் கேளுங்கள், அய்யப்பன் கோயிலுக்குப் போகிறமலை வழிப்பாதைகளிலெல்லாம் சாராயக்கடை-கள்ளுக்கடை என்று போர்டு போட்டு மது விற்கிறார்களா? இல்லையா?

அதை வாங்கிக் குடிப்பவன் யார்? 'அய்யப்பன்மார்கள்'தானே!

பிறகு என்ன விரதம் - வெங்காயம் என்று வெட்கங்கெட்டுப் போய்க் கதை சொல்லுகிறார்கள்?

அய்யப்பன் மாலை போட்டுக் கொண்டு "அவளோட ராவுகள்" சினிமா பார்க்க வருகிறானே அந்த சாமியை எதைக் கொண்டு சாற்றுவது?

ஊரை ஏமாற்ற 'விரதம்' என்று சொல்லிக் கொண்டு மொத்தக் கேடுகளையும் அவர்கள் செய்யத் தான் செய்கிறார்கள்!

'அய்யப்பன்' என்ற கடவுளின் உற்பத்தியே குட்லைப் புரட்டும் அசிங்கியமாகும். அந்தப் பிறப்பை 'ஆபாசம்' என்று சொல்லுவதுகூடச் சரியில்லை - "அசிங்கியம்" என்றே சொல்ல வேண்டும்.

"ஆணுக்கும் ஆணுக்கும் பிறந்தவன் அய்யப்பன்" என்று சொன்னால் அசிங்கியமாக இருக்கும் என்பதால், அந்தத் துடைப்பக் கட்டைக்கு ஒரு பட்டுக் குஞ்சம் கட்டி வைத்திருக்கிறார்கள்!

"ஹரிஹர புத்திரன்" என்ற குஞ்சமே அது.

'ஹரி' என்றால் மகாவிஷ்ணு, 'ஹரன்' என்றால் பரமசிவன். விஷ்ணு என்ற ஆணும் சிவன் என்ற ஆணும் கூடி - ஓரினக்கலவி செய்து-பெற்ற அசிங்கியப்

படிப்பகம்

www.padippakam.com


புத்திரன்தான் ஹரிஹரப்புத்திரன் என்கிற அய்யப்பக் கடவுள்!

இதற்குப் புத்தியில்லாப் பார்ப்பனர்களின் புராணத்தில் உள்ள கதை இது:-

பத்மாசுரன் என்ற அரக்கன் சிவ பெருமானை நோக்கிக் கடும் தவம் இருந்து வரம் வேண்டினான்.

சிவன் நேரில் தோன்றி "என்ன வரம் வேண்டும்? கேள், தருகிறேன்" என்றான்.

"நான் யார்தலையில் கையை வைத்தாலும் அவன் தலைசிதறிவிட வேண்டும் - அந்த வரத்தைத்தா" என்றான் அரக்கன்!

அறிவு கெட்ட சிவனும், எதையும் யோசிக்காமல் "அப்படியே தந்தேன்போ" என்றான்.

வரத்தைப் பெற்ற பத்மாசுரன், சிவன் தந்த வரம் பலிக்கிறதா என்பதைச் சோதித்துப் பார்க்க, சிவன் தலையிலேயே கையை வைக்கப் போனான்!

பதறிப் போன சிவபெருமான், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அசுரனிடமிருந்து தப்பி ஓடினார்!

பத்மாசுரன் விடவில்லை, விரட்டினான்!

சிவன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தலைதெறிக்க ஓடுவதையும், பத்மாசுரன் விரட்டி வருவதையும் மகா விஷ்ணு ஞானக் கண்ணால் அறிந்தார்!

தனது மச்சானின் உயிரைக் காப்பாற்றக் கருதினார்.

உண்மையான உருவத்தோடு போனால் அசுரன், தன் தலையிலும் கை வைத்து விடுவான் என்பதை உணர்ந்த விஷ்ணு பகவான், 'டக்'கென்று மோகினி வேஷம் போட்டார்.

கண்டவர்களைக் காமுறச் செய்யும் மோகினி உருவத்தோடு அசுரன் முன் போய் நின்றார், பகவான்!

பத்மாசுரன், அவர் அழகில் மயங்கி நின்றான். சிவபெருமான் தப்பி ஓடி விட்டார்!

மோகினியை நெருங்கினான் பத்மாசுரன்!

மோகினி வேடத்திலிருந்த 'பகவான் ஸ்ரீ. நாராயணமூர்த்தி' ஒரு மோகப் பார்வை பார்த்து, காமக்கிளர்ச்சியை ஊட்டி, அசுரனிடம் சொன்னார். 'நீ இப்படி வியர்வை நாற்றத்தோடு வந்தால் உன்னோடு படுக்க நான் சம்மதிக்க மாட்டேன், நன்றாகக் குளித்து விட்டு வர - கூடி மகிழ்வோம்" என்று!

மோக வெறியிலிருந்த அசுரன், ஓடினான் - பக்கத்திலிருந்த குட்டையில் குளிக்க!

குளித்தவன், தண்ணீரில் மூங்கி எழுந்து, தன் தலையைத் தேய்த்தபோது அது சுக்குநூறாகச் சிதற, பத்மாசுரன் அங்கேயே செத்தொழித்தான்.

பின்பு; பயந்து பதுங்கிக் கிடந்த சிவ பெருமானைத் தேடிக் கண்டுபிடித்து, நடந்ததைச் சொன்னார், விஷ்ணு!

சிவனுக்கும் சூடேறி சபலம் உண்டாகியது!

மோகினி ரூபத்தைத்தானும் காண வேண்டும் என்று மைத்துனரைக் கெஞ்சினார்.

விஷ்ணு, மச்சானுக்காக மீண்டும் மோகினி உருவமெடுத்தார்.

அவ்வளவுதான் - சிவபெருமானால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை!

காய்ந்த மாடு கம்பங் கொல்லையில் விழுந்த கதையாக மைத்துனன்மீது பாய்ந்து கட்டிப் பிடித்தார்!

மச்சானும் மச்சானும் "தேவர்கள் செயலை"ச் செய்தார்கள்!

சிவனுக்கு இந்திரியம் வெளிப்பட்டு வழிந்தது!

விஷ்ணு முகம் சுழித்தார். எனவே, சிவபெருமானே வழிந்த தனது இந்திரியத்தைத் தனது கையிலேயே பிடித்துக் கொண்டார்!

'ரிஷிப்பிண்டமே இராத்தங்காது' என்பார்கள். ஆனால், இது பகவான்கள் பிண்டம்-பகலே தங்கவில்லை! உடனேயே -சிவன் கையிலேயே பிள்ளையாகப் பிறந்தது! ஆண்குழந்தை!

அது கையிலே பிறந்ததால் 'கையப்பன்' என்று பெயராகி, பின்பு நாளடைவில் அது 'அய்யப்பன்' என்று வழங்குகிறது என்று கதை சொல்லுகிறார்கள்!

இந்த அசிங்கியப் பிறப்பான அய்யப்பனைத்தான். அடிமடத்தனமாகக் கும்பிடுகிறார்கள்!

ஆணும் ஆணுமோ, பெண்ணும் பெண்ணுமோ கூடிப்பிள்ளை பெற்றுக் கொள்ள முடியுமா? முடியாது! ஓரினப் புணர்ச்சி சட்டப்படியும் குற்றம்!!

இன்றைய வைத்திய முறை ஆராய்ச்சிப்படி ஓரினப்புணர்ச்சி கொண்டால் 'எய்ட்ஸ்' என்ற கொடிய உயிர்க் கொல்லி நோய் தான் வரும் என்று ஆராய்ச்சியாளர்களும் எச்சரிக்கிறார்கள்.

அப்படி 'எய்ட்ஸ்' நோயின் பிறப்பாக இருக்கும். அய்யப்பனைக் கடவுளாக்கும் பிடும் காட்டுமிரண்டிகளை என்னவென்று சொல்வது?

இந்தப் புராணக்கதை தவிர வேறு ஒரு கர்ணபரம் பரைக் கதையும் சொல்லுகிறார்கள்.



சபரிமலை - பம்பாநதிக்கரை பகுதியை ஒரு அரசன் ஆண்டு வந்தான்.

அவனுக்கு நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறு இல்லை. ஒருநாள் அவன் வேட்டைக்கு போனான். அப்போது பம்பா நதிக் கரையில் ஒரு பச்சைக் குழந்தை அழுது கொண்டு அனாதையாகக் கிடந்தது.

யாரோ ஒரு நாலுங் கெட்ட வேசி கள்ளப்பிள்ளையைப் பெற்று, ஆற்றோரம் வீசிவிட்டுப் போயிருக்கலாம்.

'பிள்ளைக்கலி'யோடு வாழ்ந்த அரசன், இந்த ஆண் குழந்தையைக் கண்டு பெருமகிழ்வு கொண்டு, அதனைத்தனது அரண்மனைக்குக் கொண்டுபோய், தன் மகனாக வளர்த்தான்.

குழந்தைக்கு 'மணிகண்டன்' என்று பெயரும் சூட்டினான்.

சில ஆண்டுகளில் அரசனின் மனைவியும் கருவுற்று, ஒரு மகவைப் பெற்றாள்.

இரண்டு குழந்தைகளும் பெரியவர்களாக வளர, இளவரசுப்பட்டம் யாருக்கு என்கிற மோதல் வந்தது.

அரசியோ, தான் பெற்ற பிள்ளையே பட்டத்துக்குரியவன்-ஒரு வீதியில் கிடந்த மணிகண்டன் அதற்கு அருகதை இல்லாதவன் என்று மன்னனிடம் சண்டை போட்டாள்.

மன்னனாலும் ராணியை மீற முடியவில்லை! நிலமையைப் புரிந்துகொண்ட மணிகண்டன், அரண்மனையை விட்டு வெளியேறிக் காட்டுக்கே போய்விட்டான்!

படிப்பகம்

www.padippakam.com



அவனோடு அவனது நண்பர்கள் சிலரும் காட்டுக்குப் போனார்கள்.

நாளாவட்டத்தில் இந்தக் கூட்டம் ஒரு கொள்ளைக் கூட்டமாக உருவெடுத்தது. மணிகண்டன் தலைவனாக இருந்தான்.

மணிகண்டனுக்கு, தனது மாற்றாந் தாயின் கொடுமையால் தனது வாழ்வு சீரழிந்தது என்கிற தாங்க முடியாத வேதனையும், அதனால் பெண் இனத்தின் மீதே அடங்காக் கோபமும் இருந்தது. பெண்களையே வெறுத்து - ஒதுக்கும் மனநிலைக்கு ஆளானான்.

இந்தக் கொள்ளைக் கூட்டம் அந்தப் பகுதி ஊர்களில் கொள்ளையடிக்கப் போகும்போது, இவர்களைக் கண்ட மக்கள் அச்சத்தின் காரணமாக ''அய்யோ... அப்பா'' என்று கத்திக் கதறினார்கள்!

இந்த "அய்யோ அப்பாவே" நாளடைவில் மணிகண்டன் கூட்டத்திற்குப் பெயராகிவிட்டது.

இரவில் திருடச் செல்லவும் காட்டில் மறைந்து வாழவும் கறுப்பு வேட்டி-கறுப்பு சட்டை அணிவது அவர்களுக்கு பழக்கமாகியது.

கால ஓட்டத்தில் மணிகண்டன் - அதாவது கொள்கைக்கூட்டத் தலைவன் முதுமையடைந்து, நோய்கண்டு மரணமடைந்தான்.

அக்காலப் பழக்கப்படி, அவனது சகாக்கள் அவனுக்கு மலை உச்சியில் 'நடுக்கல்' நட்டு, நினைவுச் சின்னம் எழுப்பி வைத்தார்கள்.

அந்த உச்சிமலைக்குப் போகப் பதினெட்டு படிகளையும் வெட்டினார்கள்.

பின்பு, மணிகண்டனின் கொள்ளைக் கூட்டத்தில் முன்னணியிலிருந்த 'கறுப்பு' என்பவனும் மரணமடைந்தான்.

அவனையும் அந்தப், படிக்கட்டுகளுக்குப் பக்கத்திலேயே புதைத்தார்கள்.

தலைவன் மணிகண்டனை 'அய்யப்பன்' என்றும், அடுத்தவனைப் 'பதினெட்டாம்படிக் கருப்பு' என்றும் சொல்லி வணங்கத் தொடங்கினார்கள்.

மலைவாழ் மக்கள், செத்து போனவர் கள்ளப் புதைத்து வைத்து, புதை குழியில் கல் நட்டு வைத்து, ஆண்டுக்கொரு முறை விழா எடுத்து படையல் போட்டு ஆடிப்பாடிக் கூடிக் களிப்பது மரபு.

அந்த மரபுப்படி அய்யப்பனும் தெய்வமாக்கப்பட்டு சபரிமலை சமாதியும் கோயிலாக்கப்பட்டு பூஜிக்கப்படுகிறது.

மணிகண்டன் பெண்களை வெறுத்தொதுக்கிப் பகையாளிகளாக நினைத்திருந்ததால் அவன் கோயிலுக்குப் பெண்கள் யாரும் போகக்கூடாது என்கிற நடைமுறையும் கடைபிடிக்கப்பட்டது.

இப்படிக் கதை சொல்லப்படும் அய்யப்பனுக்குப் பெருமை சேர்க்க, மேலும் மேலும் பல பொய்க் கதைகளைச் சொல்லி மக்களை மடையர்களாக்கி வருகிறார்கள்.

# பகுத்தறிவாளர் போராட்டத்தால் மகரஜோதி மோசடி அம்பலம்!

சபரிமலை மணிகண்டன் கோயிலில் 'மகரஜோதி' என்ற பெயரில் ஒரு ஏமாற்று மோசடியும் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

அய்யப்பன் கோயிலுக்கு நேர் எதிரேயிருக்கும் 'பொன்னம்பலமேடு' என்ற மலை உச்சியில் மகர விளக்கு நாளன்று தீப்பற்றி சுவாலை விட்டு எரியும்.

இதற்கு 'மகரஜோதி' என்று பெயர் சூட்டி, அய்யப்பன் சக்தியால் தான் இந்த ஜோதி எரிகிறது என்று மோசடிப் பேர்வழிகள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்!

இந்தப் பிரச்சாரத்தை நம்பி, மகர ஜோதியைத் தரிசிக்க பக்தர்கள் அங்கே சென்று வருகிறார்கள்.

அய்யப்பன் தனது சக்தியால் ஆண்டுக்கொருமுறை இந்த 'மகர ஜோதி'யை உண்டாக்கி பக்தர்களுக்குத் தரிசனம் தருவதாக அந்தக் கோயில் தேவஸ்தான நிர்வாகமே செய்யும் பிரச்சாரத்தைப் பக்தர்களும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த 'மகரஜோதி' எப்படி எரிகிறது? எங்கிருந்து வருகிறது என்கிற மார்மம் ஆரம்பத்தில் எல்லாருக்கும் புதிராகவே இருந்தது.

1982-ஆம் ஆண்டு வாக்கில் இந்த மகர ஜோதி மோசடியை கேரளாவைச் சேர்ந்த பகுத்தறிவாளர்கள் அம்பலப் படுத்தி, உண்மையை உலகுக்கு அறிவித்தார்கள்.

இந்தச் செய்தியை 16.1.1982ல் 'பிளிட்ஸ்' ஆங்கில ஏடு, புகைப்பட ஆதாரங்களுடன் வெளியிட்டு மோசடியை அம்பலப்படுத்தியிருந்தது.

'பிளிட்ஸ்' வெளியிட்ட செய்திக் கட்டுரை இது:-

"மகர ஜோதி" - கேரளாவில் சபரி மலை கோயிலின் எதிர்ப்புறமுள்ள 2000 அடி உயரமுள்ள மலையில் சமதரையில் குளர்காலமான டிசம்பர் அல்லது ஜனவரி மாதத்தில் தோன்றுமாம்.

இந்தக் கேலிக் கூத்தை வெட்ட வெளிச்சமாக்கும் வகையில் பகுத்தறிவாளர்கள், இந்த பின்னணி என்ன? என்பதைப் பல ஆண்டுகளாக நிரூபித்து வருகிறார்கள்.

'மகர விளக்கு' என்று சொல்லப்படும் வெளிச்சத்தை கடந்த 10 வருடங்களாக உண்டாக்கிய மனிதனை கேரளப் பகுத்தறிவாளர்கள் கண்டுபிடித்து விட்டனர்.

அவன் பெயர் கோபி. இவன் கேரள மின் துறையில் டிரைவராக பணியாற்றி வருகிறான்.

அவன் பொன்னம்பலமேடு என்ற இடத்தில், சூடத்தைப் பானையில் நிரப்பி அதைக் கொழுந்துவிட்டு எரியச் செய்து, மகர ஜோதியை உற்பத்தி செய்கிறான் என்பதையும் கண்டுபிடித்துள்ளனர்.

மேலும் சிறிய மகர ஜோதி, புனித ஜோதி என்பதெல்லாம் பந்தங்களின் ஒளியும், பட்டாசுகளின் ஒளியும், சத்தமும் ஆகும் என்பதும் வெட்டவெளிச்சமாகியிருக்கிறது.

இந்தப் புரட்டை 200 கேரளப் பகுத்தறிவாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். யாரும் அணுகமுடியாத அந்த பொன்னம்பலமேடு என்ற இடத்தை மாட்டு வண்டியில் பயணம் செய்து பல்வேறு இடர்ப்பாடுகளை அனுபவித்த பிறகே பகுத்தறிவார்கள் அடைந்தார்கள்.

அங்கே சென்றபோது வியப்பு காத்திருந்தது. 500 பேர் அங்கே குழுமியிருந்தனர். அரசாங்கத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஜீப்களும் தேவஸ்தானத்தைச் சேர்ந்தவர்களும் அங்கே

படிப்பகம்

www.padippakam.com

இருந்தார்கள். இதிலிருந்து கேரள அரசாங்கமே இந்த ஏமாற்று மோசடியை பின்னணியில் இருந்து இயக்குகிறது என்பதை அறியலாம்.

அவர்களின் ஆலோசனைப்படி கோபி என்கின்ற கோபிநாதன் (கேரள மாநில மின் துறையின் டிரைவர்) பானையில் உள்ள சூடத்தைக் கொளுத்தி, பக்தர்கள் ஜோதியை தரிசிக்கக்கூடி காத்திருக்கும் சபரிமலை இருக்கும் பக்கத்தில் மூன்று முறை தூக்கிக் காட்டுவானாம். (கடந்த பல ஆண்டுகளாக இந்த டிரைவர்தான் இந்த மோசடியை செய்து வருகிறான். அனுபவம் காரணமாக இந்தத் தொழிலுக்கு தொடர்ந்து அவனே நியமிக்கப்பட்டு வருகிறான்).

1979ஆம் வருடம் இந்த மகரஜோதி தோன்றவில்லை. மகரஜோதிக் கடவுள் வேறு எங்காவது முக்கியமான வேலையில் ஈடுபட்டது இதற்குக் காரணமல்ல. கோபி என்ற கோபிநாத நாயர், பொன்னம்மல மேட்டிற்கு செல்லாததே காரணமாகும்.

இந்த மகரஜோதி கேலிக் கூத்து 45 வருடங்களுக்கு முன்பே தொடங்கியதாகும். கேரள மின்துறை பம்பா திட்டத்திற்காக காடுகளை அழிப்பதற்கு முன்பு, காடர்-மலையர் என்ற மலைவாசிகள் அந்தக் காட்டை ஆக்ரமித்து இருந்தனர், இவர்கள் தங்களை குளிரில் இருந்து பாதுகாக்கவும் மாமிசத்தை வேகவைக்கவும் நெருப்பை உண்டாக்கினர்.

ஆனால், அந்த வெளிச்சத்தை சபரி மலையில் உள்ள கடவுளின் பெயரால் மக்களை சுரண்டும் கூட்டம், இதனைத் தங்களுக்குச் சாதகமாக பணம் திரட்டும் வழியாகப் பயன்படுத்திக் கொண்டனர்; அதை 'மகரஜோதி' என்றனர்.

அதன்பின் ஒரு மோசடிக் கூட்டம் இத்தகைய ஒரு மோசடியை திட்டம் போட்டுச் செய்து வந்தது.

கேரளப் பகுத்தறிவாளர்கள் கழகம் கேரள அரசுக்கு இந்த மோசடியை அம்பலப்படுத்தி விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டுமென்று கோரிக்கை விட்டார்கள்.

ஆனால், அரசாங்கம், நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. கோரிக்கை மனு தூக்கி எறியப்பட்டுவிட்டது.

எளிதில் ஏமாறும் அப்பாவி மக்கள் சபரி மலைக்கு வந்து ஜோதி தரிசித்து ஏமாறுவதும் ஏமாற்று வித்தை நாடகமும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. 'பிளிட்ஸ்' 16.1.1985

கேரள பகுத்தறிவாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டு, 'பிளிட்ஸ்' ஏட்டின் மூலம் புகைப்பட ஆதாரங்களோடு அம்பலப் படுத்தப்பட்ட இந்த உண்மையை, அய்யப்பன் கோயில் தேவஸ்தான நிர்வாகம் மறுத்ததோடு, அய்யப்பன் ஜோதி தெரிவதாகத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தது.

மீண்டும் 1989-ஆம் ஆண்டிலும் கேரள பகுத்தறிவாளர்கள்கூடி, மேலும் இந்த மோசடியை அம்பலப்படுத்த முடிவு செய்தார்கள்.

அதன்படி இந்திய பகுத்தறிவாளர் கழகத்தின் செயலாளர் தோழர் எடமருகு அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

மகரஜோதி உண்மைதானா என்பதைக் கண்டறிய 25 ஆயிரம் பகுத்தறிவாளர்கள் பேரணியாக சபரிமலைக்கு வரப் போவதாகவும், அந்த இடத்திலேயே மகரஜோதியை அம்பலப்படுத்தப் போவதாகவும் அவர் அறிவித்தார்.

பல்லாயிரம் பகுத்தறிவாளர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய முன் வந்தார்கள்.

இந்தத் தகவலை விளக்கி சபரிமலை தேவஸ்தான நிர்வாகிகளுக்கும் பகுத்தறிவாளர்கள் சார்பில் கடிதங்கள் எழுதப் பட்டன.

இதைக் கண்டு தேவஸ்தான நிர்வாகம் பதறித் துடித்தது. மோசடி அம்பலமாகிவிட்டால் தேவஸ்தான வருமானம் குறைந்து கோயில் பாழடைந்து போகுமே என்று குலை நடுங்கியது.

உடனே, ''பகுத்தறிவாளர்களை நாங்கள் இதற்கு அனுமதிக்க மாட்டோம். தடுத்து நிறுத்துவோம்" என்று அடாவடி அறிவிப்பு ஒன்றை திருவாங்கூர் தேவஸ்சம் போர்டு தலைவர் - டி.ராமன் பட்டாரி பட் என்பவர் அறிவித்தார்.

சபரிமலை கோயில் வளாகத்திலேயே 14.4.1989ல் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்த அவர், "பகுத்தறிவாளர்கள் உண்மையைக் கண்டறிய இங்கே வர வேண்டாம், வேறு இடங்கள் இருக்கின்றன, அங்கே போகட்டும்.

"அவர்கள் இங்கே வந்தால், இந்து அமைப்புகளும், சங்கங்களும், காவல் துறையினரும் அவர்களைத் தடுத்து நிறுத்துவார்கள்" - என்று வன்முறையாக அறித்தார்.

இந்த அறிவிப்பின் மூலம் வன்முறை நிகழ்ந்து விடக் கூடாது என்று கருதிய கேரள அரசு, பகுத்தறிவாளர்களின் பேரணியைத் தடுத்துவிட்டது.

உண்மையாகவே மகர ஜோதி அய்யப்பன் சக்தியால்தான் தெரிகிறது என்றால் அந்த உண்மையைப் பகுத்தறிவாளர்களும் தெரிந்து கொள்ளத் தக்க உரிமையைக் கோயில் நிர்வாகமே பதட்டத்துடன் தடுப்பது ஏன்?

மோசடி அம்பலமாகிவிடும் என்கிற அச்சம் தவிர வேறு என்ன?

தொடர்ந்து 1991-ம் ஆண்டிலும் இதே போல், ஒரு பேரணியை நடத்தி, மகர ஜோதியை அம்பலப்படுத்த பகுத்தறிவாளர்கள் அறிவிப்புச் செய்தார்கள்.

14.1.1991 ஞாயிற்றுக்கிழமையில் அந்தப் பேரணியை நடத்த முடிவு செய்தார்கள்.

அப்போதும், மோதல் சூழ்நிலை உருவாகிவிடும் என்கிற பதட்டத்தில், அன்றைய கேரள முதலமைச்சர் - ஈ.கே. நாயனார், பகுத்தறிவாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

அப்போது :-

"சபரிமலை மகரஜோதி தானாகத் தெரிவில்லை. அய்யப்பன் அருளாலும் தெரிவதில்லை. திருவாங்கூர் தேவஸ்தானமே ஆட்களை வைத்து மகர ஜோதியை ஏற்றுகிறது'' என்கிற உண்மையை முதலமைச்சர் - நாயனார் ஒப்புக் கொண்டார்.

"உண்மை எல்லாருக்கும் தெரியும் என்பதால் பேரணி நடத்தி, நிரூபிக்கத் தேவையில்லை" என்றும் அவர் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

முதலமைச்சரே மகரஜோதி மோசடியை ஒப்புக் கொண்டு, அறிவித்த காரணத்தால் பகுத்தறிவாளர்களின் பேரணி கை விடப்பட்டது.

இந்தச் செய்தி 10.1.1991 'மாலை முரசு' ஏட்டிலும் வெளிவந்தது.

பத்திரிகை மற்றும் எல்லாப் பிரச்சார சாதனங்களும் இந்துப் பார்ப்பனர்களின் கையில் சிக்கிக் கொண்டிருப்பதால், இது போன்ற உண்மைச் செய்திகூட, மக்கள் கவனத்துக்கு வராமல் மறைக்கப்படுகிறது என்பதே உண்மையாகும்.

இத்தனைக்குப் பிறகும் இன்னமும் 'சாமியே சரணம்' போடும் ஏமாந்த - ஏமாளிகள் திருந்தாமல், மோசடிக்குப் பலியாகி, நிர்மூடர்களாகிறார்கள் என்றால், அவர்களின் நிலைமைக்காகப் பரிதாபப்படுகிறோம் - அவர்கள் அறிவு பெற மாட்டார்களா என்றும் கவலைப் படுகிறோம்.

*- பெரியாரிஸ்ட்*

படிப்பகம்

www.padippakam.com

# கோயில் திருவிழாக்களில் பெண்கள் நிர்வாண ஆட்டம்!

தமிழ்நாட்டில் கடவுள் நம்பிக்கை குறைந்து, தன்னம்பிக்கை வளர்ந்திருக்கிறதா? இல்லையா? என்று கேட்டால், தன்னபம்பிக்கை வளர்ந்து, கடவுள் நம்பிக்கை குறைந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

அடிப்படையான ஆண்டவன் நம்பிக்கை இளைஞர்களிடம் குறைந்து விட்டதால்தான் கோயில்களில், பக்திப் பிரச்சாரத்துக்குப் பதிலாக வேறு ஆட்ட பாட்டங்களும், ஆபாச நிகழ்ச்சிகளும் நடத்திப் பக்தர்களைக் கூட்ட வேண்டிய நிலையில் இன்றைய கோயில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன!

ஆண்டவனை சேவிக்கக் கோயிலுக்குப் போகிறவர்களைவிட, உல்லாசப் பொழுது போக்குக்குக் கோவிலை நாடிப் போவோரே அதிகம்!

இந்தப் பொழுதுபோக்குக் கூத்தாட்டங்கள் இல்லாவிட்டால், இன்று பல கோயில்களுக்கு ஆட்களே போகமாட்டார்கள், கழுதை ஒதுங்கும் மடமாகத் தான் கோயில் மண்டபங்கள் இருக்கும்.

இன்று தமிழ்நாட்டுக் கிராமங்கள் பலவற்றிலும் கோயில் திருவிழா என்பதே அசிங்கமான அம்மண ஆட்டவிழாவாகத் தான் நடைபெறுகின்றன!

சேலம்; நாமக்கல், கரூர் போன்ற சில மாவட்டங்களில் பச்சையான நிர்வாண நடனங்களே கோயில் திருவிழாவாக நடைபெறுகின்றன!

நெல்லை, தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கும்ப ஆட்டம் (கரகாட்டம்) என்ற பெயரால் இந்த ஆபாச நடனம் கோயில் விழாக்களில் நடத்தப் படுகின்றன!

'பெண் உரிமை' பற்றிப் பேசி பெண்களுக்கு இடஒதுக்கீடும் கேட்டுப் போராடும் பெண்கள் சங்கங்கள் முதலில், இப்படிக் கிராமக் கோயில்களில் பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, ஆடிக் கூத்தடிக்க வைத்து ரசிக்கும் வக்கிரத்தை எதிர்த்து கிளர்ச்சிகள் நடத்த முன்வர வேண்டும்.

இந்தக் கோயில் திருவிழாக்களால் சமூகத்தின் பொதுஒழுக்கம் கிராமங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

3 - 4 பெண்களும் 1 - 2 ஆண்களும் சேர்ந்து ஆடும் இந்த ஆபாச ஆட்டத்தில், அவர்கள் செய்யும் ஆபாசச் செய்கைகளால் மரியாதையுள்ள பெண்களும், ஆண்களும் வெட்கித் தான் ஆக வேண்டும்!

இதுபோன்ற ஆபாச ஆட்டத்தைப் போலீசாரும் கண்டுகொள்வதில்லை! கேட்டால், 'கோயில் திருவிழா' என்று சமாதானம் சொல்லுகிறாள்!

'கோயில்களைத் திருடர் குகையாக்கி வேசிமடமாகவும் ஆக்கிவிட்டார்கள்' என்று காந்தி, இயேசு போன்ற மேலோர்கள் சொன்ன சொல், இன்றையத் தமிழகத்துக்குப் பெரிதும் பொருத்தமானதாகும்!

கிராமங்கள், கலாச்சாரத்தின் பிறப்பிடமாக - காப்பிடமாக இருந்த காலம் போய், அநாகரீக - அசிங்கியங்களின் பிறப்பிடமாக மாறிவிட்டன! இதற்குக் கிராமத்துக் கோயில்களும், அதன் திருவிழாக்களுமே காரணமாக இருக்கின்றன!

இவைகளை எல்லாம் அடக்கி - ஒடுக்கி தடுக்க வேண்டிய காவல் துறையோ, இந்த ஆபாசத்துக்குக் காவல் நின்று கொண்டிருக்கின்றன!

கிராமத்துக் கோயில்களில் இது போன்ற முழுநிர்வாண நடனம் ஆடுவுது மட்டுமல்ல, ஆடு, பன்றி, கோழி போன்றவைகளை உயிர்ப் பலியிடும் பழக்கமும் இன்று வரையில் தடுக்கப்படவில்லை!

பல கிராமங்களில் கோயில்களுக்கு முன்னாலும், தெரு வீதியிலும்கூட ஆடு, பன்றிகளைப் பலியிடுகிறார்கள்! இப்படிப் பலியிடுவது, தடை செய்யப்பட்டுப் பல ஆண்டுகளாகின்றன என்றாலும்; ஆண்டவன் பெயரால், தெய்வத்தின் பெயரால் இன்று வரையில் இந்தக் கொடுமை நடந்து கொண்டுதானிருக்கின்றன!

பெண் உரிமை காக்கப் போராடும் சங்கங்கள், உயிர் வதை செய்வதைத் தடுக்கும் சங்கங்கள் என்பதெல்லாம், பட்டணங்களில் கூடிக் கூத்தடிக்கின்றனவே. தவிர, கிராமங்களில் இன்றும் எந்தத் தாக்கத்தையும் உண்டாக்க யாரும் முயற்சிக்கக் காணோம்.

நமது கிராமங்கள் தலைநிமாராத வரையில், பட்டணங்களில் எத்தனை 'கம்ப்யூட்டர்' வந்துதான் என்ன பயன்?

கிராமத்து மக்கள் இன்னமும் கடந்த நூற்றாண்டு வாசிகளாக, அறியாமையில் வாழ்ந்தால் - அதையும் அரசு நிர்வாகம் கண்டும்; காணாததுபோல் இருந்தால், நம் நாடு ஒட்டு மொத்தமாக எப்போது நாகரீகம் பெற்று, உயர்வது என்பதைச் சிந்திப்போமாக!

*- தேசியவாதி*

## பல்லி விழும் பலன்!

ஒருவர் ஓய்வாகப் படுத்திருந்தார். அவர் விலாமீது ஒரு பல்லி விழுந்து, ஓடிப் போனது.

பரபரப்போடு எழுந்த அவர் 'பல்லி விழும் பலன்' புத்தகத்தை எடுத்துப் படித்துப் பலன் பார்த்தார்.

'பல்லி விலாவில் விழுந்தால் மரணம்' என்றிருந்தது. பலன் பார்த்தவர் பதட்டமடைந்தார்!

திரும்பிய அவர், உலையிலிருந்த கொதி நீர்ப்பானையைப் பார்த்தார்!

விழுந்த பல்லி கொதி நீர்ப் பானைக்குள் செத்துக் கிடந்தது!

'பல்லி விழும் பலன்' மனிதனுக்கா? பல்லிக்கா?

புரியாமல் திகைத்த அவர் செத்த பல்லியை எடுத்துத் தெருவில் வீசினார்.

- அசுரன்

படிப்பகம்

www.padippakam.com

வாடிக்கையாளர் அனைவருக்கும் விழாக்கால வாழ்த்துக்கள்!

# சந்திரபவனில்

சாப்பிட்டவர்கள் பாராட்டுகின்றனர் !
பரவசமடைகின்றனர் !

மினி மீல்ஸ், டிபன் வகைகள், ஃபிரஷ் ஜூஸ்

**ருசி, மணம், இனியசுவை, பாரம்பரியம் மாறாத சாப்பாடு !**

## மீல்ஸ் செக்ஷன் மாடியில்

திறமையான சமையல் கலைஞர்களைக் கொண்டு தரமாக தயாரிக்கப்படுகிறது.விலை உயர்ந்த புழுங்கல், பச்சை அரிசி சாதம் ஒவ்வொரு நாளும் விதவிதமான கூட்டு, பொரியல், பச்சடி, அப்பளம், சாம்பார், ரசம், காரக்குழம்பு, பாயசம், தயிர் என்று விருந்தே படைக்கிறோம். தந்தூரி, சைனீஸ் வகை உணவுகளும் உண்டு.

*குடும்பத்துடன் வந்து சாப்பிட்டு மகிழுங்கள்!*



# CHANDRA BHAVAN

சென்னையில் உயர்தர சைவ உணவகம்

AVAILABLE CAR SERVICE
8.30 P.M. TO 11.00 P.M.

திருமணம், விருந்து, விழாக்களுக்கு மொத்த ஆர்டரின் பெயரில், மதிய, இரவு சாப்பாடு மற்றும் காலை டிபன்களை நாங்களே வந்து சப்ளை செய்கிறோம்.

51, என்.எஸ்.கே. சாலை,
(ஆற்காடு ரோடு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.




☎ 4802850



www.padippakam.com



# மத்திய மாநில அரசுகளின் விடுமுறையை ஒழிக்க வேண்டும்

இந்தியத் திருநாட்டை ஆளும் மத்திய மாநில அரசுகளுக்கு ஞாயிற்றுக் கிழமை விடுமுறை என்பதும் மற்றும் இந்துக்களின் பண்டிகையான தீபாவளி, பொங்கல், சரஸ்வதி பூஜை, கண்ணன் பிறந்த நாள் என்றும், கிறிஸ்தவர்களுக்கு யேசு பிறந்த நாள், மரித்த நாள், இஸ்லா மியர்களுக்கு ரம்ஜான் மற்றும் பல பண்டிகைகளுக்கும் விடுமுறை என்பது நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்த நடைமுறையாகும்.

'இவ்வளவு விடுமுறை தேவைதானா?' என்ற கேள்வியும் எழுந்ததுண்டு.

இந்தப் பண்டிகைகளுக்காக அரசாங் கத்தையே மூடிவிடுவது என்பது தேவை தானா? என்பதை சிந்திக்கும் காலம் வந்துவிட்டது. ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களும் நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்களும் இதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டிய காலம் வந்துவிட்டது.

வெறுமனே சிந்தித்துக் கொண்டிராமல் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய காலம்இது.

ஏனென்றால் ஞாயிற்றுக்கிழமை மட்டும் அரசு விடுமுறையாக இருந்த நிலைமை மாறி, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி காலத்தில் சனிக்கிழமையும் விடுமுறை என்று வந்து, கடந்த பதினைந்து ஆண்டுகளாக நடைமுறை யில் இருந்து கொண்டிருக்கிறது.

மத்திய அரசு அப்படி அறிவித்தபின் மாநில அரசும் அதுபோல சனிக்கிழமை யும் விடுமுறை என்று அறிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு அதுவும் இப்போது நடைமுறையில் இருக்கிறது.

சனி, ஞாயிறு விடுமுறை அதற்கு முன்னால் வெள்ளி ஒருநாள் விடுமுறை என்றால் வாரத்தில் 3 நாட்கள் அரசுப் பணிகள் இயங்காது. இதனால் மக்கள் பணி எவ்வளவு காலதாமதப்படுகிறது? அத்துடன் திங்கட்கிழமையும் விடுமுறை என்று வந்துவிட்டால், இன்னும் நிலைமை மோசமாகி விடுகிறது.

பொதுமக்களின் பணிகள் ஒரு வாரத் திற்கு முடிவு அடைய வேண்டியவை. 2 மாத காலம் நீட்டிததுத்தான் இப்போது முடிகிறது. இதுபோல விடுமுறைகள் வேறு வந்து தொலைத்தால் இன்னும் கால தாமதம் ஏற்படுகிறது.

கடந்த அக்டோபர் மாதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். 1, 2 அரசு விடுமுறை அப்புறம் 6, 7, 8 விடுமுறை. அதாவது, 7 நாளில் 5 நாள் விடுமுறை 2 நாள்தான் வேலைநாட்கள். எந்தக் காரியமாவது ஒழுங்காக நடக்குமா? பேங்குகாரர்களுக்குச் சென்று பணம் எடுக்க முடியுமா? கொண்டுபோய் பணத்தைச் செலுத்த முடியுமா? நாள் தவறி விட்டால் எவ்வளவு கஷ்டத்தை மக்கள் அனுபவிக்க நேரிடுகிறது.

இப்போது சிண்டிகேட் வங்கி, இந்திய வங்கி, ஐ.ஓ.பி. போன்றவை வாரத்தில் 7 நாட்களும் செயல்பட்டுக் கொண்டிருப் பது ஒரு ஆறுதலான விஷயம்.

கோர்ட்டுகளும் சனிக்கிழமை செயல் படுவதும் ஆறுதல் அளிக்கிறது. ஞாயிறு களிலும் செயல்பட்டால் நல்லது. கோடிக் கணக்கில் வழக்குகள் தேங்காது.

அரசாங்கத்திற்கு ஒருவன் மனுக் கொடுத்து, அந்த மனுவின்மீது நட வடிக்கை எடுக்கப்பட்டு, முடிவு அறிவிக்க குறைந்தது 6 மாத காலம், 10 மாத காலம், 16 மாத காலம் ஆகிறதே. இது பற்றியெல்லாம் நாட்டு நலனில் அக்கறை யுள்ளோர் சிந்திக்க வேண்டாமா? கவலைப்பட வேண்டாமா? காரியம் செய்ய வேண்டாமா?

அரசு விடுமுறை நாட்களைக் குறைத் தால் அரசு ஊழியர் சங்கங்கள் ஆர்த் தெழுந்து போராட்டம் நடத்தி அரசையே செயல்பட விடாமல் ஆக்கிவிடுகிறார் களே! என்ன செய்வது?

அரசு ஊழியர்களுக்கு விடுமுறை 2 நாள் என்று இருப்பதை சனிக்கிழமை வேலைநாள். ஞாயிறு மட்டும்தான் அரசு விடுமுறை என்று அறிவித்து 1989-ல் கலைஞர் பட்டபாடு மறந்தாவிட்டது. உடனே அரசு ஊழியர்களின் எதிர்ப்பை உணர்ந்து மீண்டும் சனி, ஞாயிறு விடுமுறை என்றல்லவா அறிவிக்க வேண்டிய நிலை வந்தது!

சரி. என்னதான் செய்வது? இந்தக் கேள்விக்கு விடைதான் இல்லையா, என்றால் இருக்கிறது, செய்ய முடியுமா என்றால் முடியும்!

என்ன செய்யலாம் எனில் அரசு 'ஊழியர்களுக்கு' விடுமுறை விடப்பட வேண்டும். 'அரசு'க்கு விடுமுறை கிடை யாது. அரசாங்கம், மக்களின் அரசாங்கம், மக்களின் அரசாங்கம், எந்த நாளானா லும், இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். எந்த விடுமுறை நாளானா லும், அரசு செயல்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு 'சுழல் முறை'யில் விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.

'திங்கள் முதல் ஞாயிறு வரை ஒவ்வொருவருக்கு ஒருநாள் வார விடுமுறை' என்று அறிவித்துச் செயல் பட வேண்டும். அரசாங்க போக்கு வரத்துத் துறை, ஆஸ்பத்திரி, ரயில்வே, விமானப் போக்குவரத்து எந்த விடுமுறை நாளாக இருந்தாலும், இயங்கிக் கொண்டே இருக்கிறது அல்லவா? அது போல அரசாங்கமும் செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். பாங்கிகள் இயங்குவதுபோல, அரசு அத்தியாவ்சியத் துறைகள்இயங்கிக் கொண்டிருப்பது போல, அரசாங்கமும் எல்லா விடுமுறை நாட்களிலும் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். அரசாங்கப் பணிகள் காலதாமதமாகத்தானே நடக்கின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மை தான் என்றாலும், இந்த மாதிரியான நான்கு, ஐந்து நாள் என்று விடுமுறை வந்தால் மிக, மிகக் கால தாமதம் ஏற்படுகிறது அல்லவா! அதைத் தடுத்து நிறுத்த முடியும்.

மத்திய, மாநில அரசுகள் இந்த முடிவை விரைவில் மேற்கொண்டு, மக்க ளுக்காக மக்களின் அரசை நடத்த முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

தேசத் தந்தை காந்தியடிகளின் பிறந்த நாளுக்கு விடுமுறை அளிக்க

படிப்பகம்

www.padippakam.com

லாம். கிருஷ்ணன் பிறந்த நாளுக்கு விடுமுறை எதற்கு?

சுதந்திரத் திருநாள், குடியரசு அமைந்த நாள் விடுமுறை அளிக்கலாம். சரி. விநாயகர் சதுர்த்திக்கு ஏன் அய்யா விடுமுறை? யேசு பிறந்த நாள், ரம்ஜான் விடுமுறை தேவையா?

எனவே, முக்கியமான நாட்களுக்கு மட்டும் விடுமுறை அளித்து மற்றபடி எல்லா நாட்களிலும் அரசாங்கம் செயல் பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

இதனால் மக்களுக்காக மக்கள் அரசாங்கம் வேகமாகச் செயல்பட முடியும். எந்தப் பணி தாமதப்பட்டது என்று குறிப்பிட்டுக்கூற வேண்டுமென் றால், தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான தனி நபர் பிரச்சினையும், இந்தியா முழு வதும், கோடிக்கணக்கான மக்களின் தனி நபர் பிரச்சினைகளும் இருக்கும். எழுத ஏடு போதாது.

எனவேதான் தைரியமாக இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். வாஜ்பாய் பிரதமரான பிறகு, பல கொள்கைகளில் துணிச்சலாக முடிவு எடுக்கிறார். விடுமுறைப் பிரச்சினையிலும் விவேகமான முடிவு எடுக்க வேண்டும்.

*- வேலன்*


இரண்டாம் பதிப்பு விற்பனையாகிறது....

நாத்திகம் - இராமசாமி எழுதிய

**R.S.S. இந்து பாசிசம்**

வரலாற்றுத் தொகுப்பு நூல் - முதல் பதிப்பு விற்றுத் தீர்ந்து, இரண்டாம் பதிப்பு விற்பனையாகிறது. படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பல சம்பவங்களைக் கொண்டது. உடனே வாங்கிப் படியுங்கள்.

**தனிப்பிரதி ரூ.30.00 (பக்கங்கள் - 160)**

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு.
பணத்தை மணியார்டர் மூலம் அனுப்புங்கள்.

**மேலாளர்,**
நாத்திகம், சென்னை - 600 024.




## தலைவர் பெரியாரே!

தமிழருக்கு
பெரியார்தான் தலைவர்
நீங்கள் விரும்பினாலும்
விரும்பாவிட்டாலும்
ஏற்றாலும்
ஏற்காவிட்டாலும்
நமது மனித உரிமைகள்
மீட்கப்படப் போராடியவர்
பெரியார்தான்
தந்தை பெரியார்தான்!

படிப்பகம்

www.padippakam.com

NATHIGAM R.N.I. NO: 1345/58 REGD. TN/CHIEF P.M.G. 781/2000. EGMORE RMS 1 PATRIKA CHANNEL 1-1-2001


வாடிக்கையாளர் அனைவருக்கும் விழாக்கால வாழ்த்துக்கள்!


# ஆஷாவிஷன்

மஹா ஏ/ஸி ஷோரூம்

97, ஆற்காடு ரோடு, (அரசு மேல்நிலைப்பள்ளி அருகில்) கோடம்பாக்கம், சென்னை-24.

பான் : 4841837

விழாக்கால
சிறப்பு
தள்ளுபடி



BPL SAMSUNG LG THOMSON PHILIPS

Whirlpool Godrej IFB aiwa ONIDA

*0% INTEREST SCHEMES*

*AVAILA OF EASY INSTALMENT FACILITY THROUGH*

*CREDIT CARDS ACCEPTED*

# ASHA VISION A/c SHOW ROOM

97, Arcot Road, (Near Govt. Hr. Sec. School) Kodambakkam, Chennai - 24. Ph: 4841837

318, Arcot Road, Kodambakkam, Chennai - 600 024. Ph: 4837351, 4721122


ஆசிரியர், அச்சிட்டு வெளியிடுபவர் பி.இராமசாமி, பெரியார் அச்சகம், நாத்திகம் கட்டிடம், 97/55, என்.எஸ்.கிருஷ்ணன் சாலை, சென்னை - 600 024. தொலைபேசி எண் : 484 8061.

படிப்பகம்